திருவேற்காடு நகராட்சி

**அவசரக் கூட்டம்**

திருவேற்காடு நகராட்சியில் **2025–ஆம் ஆண்டு ஜூலை** மாதம் **09**ம் நாள் **புதன்க்கிழமை காலை 11.00** மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட தீர்மான நகல்.

**பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்.390, பொது முதல்வரின் முகவரித் துறை நாள்.19.06.2025–ன்படி "உங்களுடன் ஸ்டாலின்" புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுத்திடவும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற முன்னெடுப்பின் கீழ் மண்டல அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி "அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது, ஒவ்வொரு துறையின் பொறுப்பாகும்" என கோரிக்கைகளை உடனுக்குடன் தீர்வுகாண வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே, "உங்களுடன் ஸ்டாலின்" என்ற இந்த திட்டம் அன்றாடம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகள் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில் சம்மந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரே குடையின் கீழ் கோரிக்கைகளை பெற அனைத்து மாவட்டங்களில் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், முகாம்களில் பெறப்படும் அனைத்து மனுக்களும் 45 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி முகாமினை இப்பகுதியில் நடத்திட கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மேற்கண்ட முகாமிற்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுமாறும், பணிகள் எவ்வித சுணக்கமின்றி செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, மேற்படி முகாம் நடைபெறும் விபரத்தினை அந்தந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் தயார் செய்து வழங்கிடுதல், ஒலிபெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் மேற்கொள்ளுதல், Flex, பேனர்கள் மூலம் விளம்பரம் மேற்கொள்ளதல், அடிப்படை வசதி பணிக்கான சாமியான, மேஜை மற்றும் நாற்காலிகள், மின்விளக்குகள், குடிநீர், சிற்றுண்டி, தேநீர் போன்ற இதர பணிகளை மேற்கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவின தொகை ரூ.15,00,000/– இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

தீர்மான எண்.**976**

**பொருள் எண்.2**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில், 2024–25ம் ஆண்டில், டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண். 491

நாள் 29.09.2023–ல் பின்வரும் மகளிர் சுய உதவி குழு / நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1) அமலேஸ்வரி அசோசியேட்ஸ்,
2) வடநூம்பல் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு
3) ரைட்கேர் சர்வீஸ்
4) இராணி அண்ணா நகர் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 03.07.2025 அன்று இந்நகராட்சியில் நேரடி ஆய்வின் போது வழங்கிய அறிவுரைகளின்படியும், பருவ மழைக்காலம் தொடங்கி விட்டப்படியாலும், நகராட்சிப் பகுதிகளில், டெங்கு காய்ச்சல் அறிகுறிகள் தென்படுவதால், பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு, பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்திற் கொண்டு, ஏற்கனவே, இந்நகராட்சியில் கடந்த முறை ஈடுபடுத்தப்பட்ட மேலே காணும் மகளிர் சுய உதவிக் குழு / நிறுவனங்களை மீண்டும் அதே விலை விகிதத்தில் ஈடுபடுத்திக் கொள்ளவும், அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதி/ திடக்கழிவு மேலாண்மை கட்டணம் (SUC) மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

தீர்மான எண்.977

<u>பொருள் எண்.3</u>

அரசாணை (நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள். 23.11.2016ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்கேற்ப, இந்நகர்மன்றத்தின் தீர்மான எண்.954, நாள். 20.06.2025–ல் கீழ்காணும் அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் உள்ள கழிவறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பள்ளி மற்றும் இடம் | மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரசு உயர்நிலைப்பள்ளி, சுந்தர சோழவரம் | 561 | 2 |
| 2 | நகராட்சி தொடக்கப்பள்ளி, சுந்தரசோழவரம் | 273 | 1 |
| 3 | அரசு உயர்நிலைப்பள்ளி, கோலடி | 485 | 2 |
| 4 | நகராட்சி தொடக்கப்பள்ளி, கோலடி | 238 | 1 |
| 5 | நகராட்சி தொடக்கப்பள்ளி, அயனம்பாக்கம் | 107 | 1 |
| 6 | அரசு மேல் நிலைப்பள்ளி, அயனம்பாக்கம் | 501 | 2 |
| 7 | அரசினர் ஆரம்பப்பள்ளி (ஆதிந) அயனம்பாக்கம் | 137 | 1 |
| 8 | நகராட்சி தொடக்கப்பள்ளி, ராஜாங்குப்பம் | 18 | 1 |
| 9 | நகராட்சி நடுநிலைப்பள்ளி, வீரராகவபுரம் | 92 | 1 |
| 10 | அரசு உயர்நிலைப்பள்ளி, வேலப்பன் சாவடி | 388 | 1 |
| 11 | நகராட்சி தொடக்கப்பள்ளி, வேலப்பன் சாவடி | 171 | 1 |
| 12 | நகராட்சி தொடக்கப்பள்ளி, புளியம்பேடு | 85 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 13 | நகராட்சி தொடக்கப்பள்ளி, நூம்பல் | 70 | 1 |
| | மொத்தம் | | 16 |

எனவே, மேற்காணும் விவரப்படி உள்ள தூய்மை பணியாளர்களை மகளிர் சுய உதவி குழு மூலமாக பணிகள் மேற்கொள்ள, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.978**

**பொருள் எண்.4**

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2022–2023–ம் நிதியாண்டின் கீழ் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ரூ.120.00 மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புளியம்பேடு கிராமம் சர்வே எண்.13/3–ல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களால் 03.07.2025 அன்று நேரடி களஆய்வு மேற்கொண்ட போது அக்கட்டிடத்திற்கு தேவையான கூடுதல் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தருமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, மேற்படி கட்டிடத்திற்கு மண் நிரப்புதல், சுற்றுச்சுவர் அமைத்தல், அலமாறிகள் ஏற்படுத்துதல், பேவர் பிளாக் வசதி மேற்கொள்ளுதல், இரும்பு கேட் அமைத்தல், வெளிபுறத்தில் முள்வேலி பணிகள்(Fencing) போன்ற இதர அடிப்படை வசதி பணிகளை ஏற்படுத்திட அதற்காக ஆகும் தோராய செலவின தொகை ரூ.28.00/– இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.979**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14–ல் பேருந்து நிலையம் அருகில் சென்னை உயர்நீதிமன்ற அனுமதியின் போரில் கொடிகம்பங்கள் அகற்றி தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பேருந்து நிலையம் முன் கொடி கம்பங்கள் அகற்றப்பட்டது. அப்பணியின் போது பேருந்து நிலையத்தின் சுற்றுச்சுவர் சேதமடைந்த பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேலும், பேருந்து நிலையத்தின் உள்ள அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் மேல்மூடி சேதமடைந்தும் உள்ளது.

எனவே, மேற்படி சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தி புதியதாக மாற்றியமைக்கவும், பேருந்து நிலையத்தின் அருகே உள்ள மழைநீர் வடிகால்வாய்க்கு மேல்மூடி அமைத்துக் கொள்ளவும், மேலும், பேருந்து நிலையம் அருகே உள்ள சாலையினை விரிவாக்கம் செய்து தார்சாலை அமைத்துக்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.980

**பொருள் எண்.6**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காலை சிற்றுண்டி வழங்கப்படும் திட்டம் துவங்கப்பட்டு 2023–2024 ஆம் ஆண்டு முதல் திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு பள்ளிகளில் 01 முதல் 05–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கிட ஏதுவாக கோலடி பகுதியில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் (Common kitchen) கூடம் அமைக்கப்பட்டு பள்ளிகளுக்கு உணவுகள் பரிமாறும் பணிகள் தனியார் நிறுவனத்தாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவ்வாறு மேற்கொண்டுவரும் பணியினை தினசரி கண்காணிப்பு மேற்கொள்ள எதுவாகவும், குழந்தைகளுக்கு தயாரிக்கப்படும் உணவு தரமான முறையில் தயார் செய்யும் முறையினை தினசரி கண்காணிக்க கோரி உயர் அலுவலர்களால் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மேற்படி கட்டிடத்தில் கண்காணிக்க தேவையான 8 எண்ணிக்கையிலான CCTV அமைப்பினை ஏற்படுத்தி, LED TV மூலம் கண்காணிப்பு செய்திட அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.20/– இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.
ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.981

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.7**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் கிராமம், புல எண்.400–ல் 0.73.0 ஹெக்டேர்ஸ் விஸ்தீரணம் உள்ள "ருத்ரபூமி" என வகைபாடு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு இடங்களில் உள்ள குடியிருப்பு உபயோக ஆக்கிரமிப்புகளை ஒரு முறை விலக்களிப்பு அடிப்படையில் வரன்முறைப்படுத்திட ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வகுத்து அரசாணை (நிலை) எண்.97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (நி.மு.1(1)) துறை, நாள்.21.02.2025–ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்காணும் கிராமத்தில் உள்ள புல எண்ணில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவது தொடர்பாக நகர் மன்ற தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகல் அனுப்பி வைக்குமாறு வட்டாட்சியர், பூவிருந்தவல்லி அவர்களின் கடிதம் ந.க.எண்.704/2025/ஆ2, நாள்.01.07.2025–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | கிராமத்தின் பெயர் | புல எண் | மொத்த விஸ்தீரணம் (ஹெக்டேர்ஸ்) | வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | பூவிருந்தவல்லி | அயனம்பாக்கம் | 400 | 0.73.0 | ருத்ரபூமி |

எனவே, திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் கிராமம், புல எண்.400-ல் 0.73.0 ஹெக்டேர்ஸ் விஸ்தீரணம் உள்ள "ருத்ரபூமி" என வகைபாடு செய்யப்பட்ட இடத்தில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்குவது தொடர்பாக திருவேற்காடு நகராட்சிக்கு எவ்விதமான ஆட்சேபனையும் இல்லை என்ற விவரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1636/2025/எப்1)**

---

தீர்மான எண்.982

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.8**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட சுந்தரசோழவரம் கிராமம், புல எண். 10/7B-ல் 0.70.50 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள "புன்செய்" என வகைபாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் 0.40.5 ஏர்ஸ் நிலத்தினை கால்நடை மற்றும் பராமரிப்புத்துறைக்கு மந்தைவெளி நிலமாக வகைபாடு மாற்றம் செய்து நகர் மன்ற தீர்மானம் நிறைவேற்றி தீர்மான நகல் அனுப்பி வைக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.29769/2021/N1, நாள்.30.04.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி வட்டம், சுந்தரசோழவரம் கிராமத்தில் மாற்றிடமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள புலமானது கிராமக் கணக்கில் பின்வருமாறு தாக்கலாகி வருகிறது.

| வ. எ ண் | புல எண் | மொத்த விஸ்தீரணம் (ஹெக்டேர்ஸ்) | நிலமாற்றம் செய்யப்பட உள்ள புலம் (ஹெக்டேர்ஸ்) | வகைப்பாடு | பட்டா எண் (ம) அனுபவதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | 10/7B | 0.70.5 | 0.40.5 | புன்செய் | 7315- தமிழ்நாடு அரசு மறுவாழ்வு இல்லம், மேல்பாக்கம் கிராமம் |

எனவே, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், சுந்தரசோழவரம் கிராமம், புல எண்.10/7B-ல் விஸ்தீரணம் 0.70.50 ஏர்ஸ் பரப்பு 0.40.5 ஏர்ஸ் அரசு புன்செய் நிலத்தினை கால்நடை மற்றும் பராமரிப்புத்துறைக்கு மந்தைவெளி நிலமாக வகைபாடு மாற்றம் செய்து வழங்குதல் தொடர்பாக திருவேற்காடு நகராட்சிக்கு எவ்விதமான ஆட்சேபனையும் இல்லை என்ற விவரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2556/2025/எப்1)

---

தீர்மான எண்.983

**பொருள் எண்.9**

திருவேற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் M/s: Ourland Engineering Works Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் மேற்கொண்டு வந்தது. இந்நிறுவனம் தமது பணியில் KPI முறைப்படி சரிவர பணிகளை மேற்கொள்ளாத்தால், பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் குறைவாக வழங்கியதாலும் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை. இதன்காரணமாக தினசரி நாளிதழ், வாட்சப் செய்திகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து பல்வேறு புகார்கள் வந்ததால் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு பல்வேறு தேதிகளில் அறிவிப்புகள் வழங்கியும் பணியில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தினால் இந்நகர்மன்ற தீர்மானத்தின் மூலம் மேற்காணும் நிறுவனத்தின் பணி உத்தரவினை இரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவு ந.க.எண். 33553/22/EA1 நாள். 27.11.2024 யில் பணியினை இரத்து செய்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 291/2023/எச்1, நாள். 17.12.2024 –யில் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு இரத்து செய்து மறுஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு M/s. கீரின் வாரியார் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி உத்தரவிடப்பட்டது.

மேற்காணும் நிறுவனம் இந்நகராட்சியினை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இரு வழக்குகளை (OA.No. 11/2025 & OP.No. 21/2025) தொடர்ந்துள்ளது. எனவே, இந்த இரு வழக்குகளுக்காக இந்நகராட்சியின் சார்பில் எதிர்த்து வழக்காடும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் நீதிமன்ற கட்டணங்கள் செலுத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.292/2025/எச்1)

---

தீர்மான எண்.**984**

**பொருள் எண்.10**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு இயக்கப்பட்டு வரும் மின்மோட்டார்களுக்கு போதிய பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்த விலைவிகிதத்தின்படி அடிப்படையில் ஒப்பந்த பணியாளர்களை (Out Sourcing) நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, வார்டு எண்:1 மற்றும் வார்டு எண்.3 உள்ள மின்மோட்டார்களை இயக்கிடவும், தடையின்றி குடிநீர் விநியோகம் பணியினை மேற்கொள்ளவும். ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த

பணியாளர்களை (Out Sourcing) மேற்கண்ட வார்டுகளுக்கு அமைத்துக்கொள்ளவும் அதற்காக ஆகும் செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

---

தீர்மான எண்.985

**பொருள் எண்.11**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள கோலடி உரக்கிடங்கு உள்ளே செல்லும் அணுகு சாலை மற்றும் முன்புற பகுதி முற்றிலும் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. இதனால், உரக்கிடங்கிற்கு எந்த வாகனமும் செல்ல முடியவில்லை.

எனவே, மேற்கண்ட பகுதியில் 25மீ நீளத்திற்கு, 4.50 அகலத்தில் GSB அமைத்து சிமெண்ட் தளம் அமைப்பதற்கு உண்டான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிக்காக செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண்.986

*ஒம்/–*. E. கிருஷ்ணமூர்த்தி

நகர்மன்றத் தலைவர்,

திருவேற்காடு

/உண்மை நகல்/

ஆணையர்,

திருவேற்காடு நகராட்சி.